## போராட்ட வரலாறு — ஆற்ற வேண்டிய கடமைகளை

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ மாநாடு சொல்லும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, டிச. 30 –

போராட்ட வரலாறு மற்றும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளை பல்லடத்தில் நடைபெறும் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ மாநாடு சொல்லும் என்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டு நேற்று முன் தினம் (28.12.2025) சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டில் உள்ள நம் சகோதரிகள் அனைவரும் #வெல்லும்_தமிழ்ப்_பெண்கள்தான்! திராவிட இயக்கத்தால் தலைநிமிர்ந்து வெற்றி நடை போடும் போராட்ட வரலாற்றையும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளையும் பல்லடத்தில் நடைபெறும் #வெல்லும்_தமிழ்ப்_பெண்கள் மேற்கு மண்டல @DMK Womens Wing மாநாடு சொல்லும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.12.2025) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படவுள்ள இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப் போட்டி சாம்பியன்ஷிப் 2026 (SDAT INDIA INTERNATIONAL YOUTH SAILING CHAMPIONSHIP IIR ) மற்றும் 5150 டிரையத்லான் சென்னை – 2026 போட்டிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை, கடற்படை, கடலோர காவல்படை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர,

# பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி. டிச. 30 –

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 28.12.2025, ஞாயிறு அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.அகஸ்தீசன், நாகர்கோவில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கழக மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா கலந்து கொண்டு மாநகர வட்டம், ஒன்றிய ஊராட்சி கிளை, பேரூர் வார்டு கழகம் மற்றும் பூத்துகளுக்கு இளைஞர் அணி நிர்வாகிகள் நியமிப்பது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பார்த்தசாரதி, ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, த.செல்வன், பி.சற்குரு கண்ணன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர்கள் நாகூர்கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, திருவள்ளூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ் குமார், கிரண் மற்றும் மாவட்ட, நாகர்கோவில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் மாநகர வட்டம், ஒன்றிய ஊராட்சி கிளை, பேரூர் வார்டு கழகம் மற்றும் பூத்துகளுக்கு இளைஞர் அணி நிர்வாகிகள் நியமன பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

விருதுநகரில் நடைபெற இருக்கின்ற தெற்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.அகஸ்தீசன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கழக மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பார்த்தசாரதி, எம்.மதியழகன், பா.பாபு, த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நாகூர்கான், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், த.ஜீவா, சுரேஷ்குமார், கிரண் மற்றும் மாவட்ட, நாகர்கோவில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை கிழக்கு தொகுதி மேற்கு வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பொதுமக்களை சந்தித்து அவர்களது குறைகளை கேட்டறிந்து கோரிக்கை மனுக்களை பெற்றார், இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி செயலாளர் விசாலாட்சி, ஊரக வளர்ச்சித்துறை துணை இயக்குனர் அரவிந்த், ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன், முன்னாள் சேர்மன் பா.வீரராகவன், துணை சேர்மன் கார்த்திக் ராஜா, திருப்பாலை பகுதி செயலாளர் சசிகுமார் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பங்கேற்றனர்.


